

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2025) பேராசிரியர் அவர்களின் 103–வது பிறந்தநாளையொட்டி சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, மாணவ, மாணவிகளுக்கு மடிக்கணினிகள் உள்ளிட்ட கல்வி உபகரணங்களை வழங்கினார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க. பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பேராசிரியர் அவர்களின் புதல்வர் அன்புச்செல்வன், பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான அ. வெற்றி அழகன் மற்றும் பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2025) பேராசிரியர் அவர்களின் 103வது பிறந்தநாளையொட்டி சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். உடன் கழக துணைப் பொதுச் செயலாளர் முனைவர் க. பொன்முடி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பேராசிரியர் அவர்களின் புதல்வர் அன்புச்செல்வன், பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான அ.வெற்றி அழகன் மற்றும் பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (19.12.2025) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் உறுப்பினரும், டிசம்பர் 3 இயக்கத்தின் மாநிலத் தலைவருமான பேராசிரியர் தீபக் நாதன், தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளி பகுதிநேர ஆசிரியர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஜலீல் முகைதீன், தமிழ்நாடு என்.எச்.எம். பணியாளர்கள் கூட்டமைப்பின் மாற்றுத்திறனாளிகள் பிரிவு மாநில ஒருங்கிணைப்பாளர் ஆ. பகவதிக்குமார், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் மாற்றுத்திறனாளிகள் ஊழியர்கள் நலச்சங்கத்தின் மாநிலத் தலைவர் பஹாத் முகம்மது மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, மாற்றுத்திறனாளிகளுக்கு உள்ளாட்சி மன்றங்களில் நியமன முறையில் உரிய பிரதிநிதித்துவம் வழங்கும் வகையில் சட்டத்திருத்தம் கொண்டுவரப்பட்டு, உள்ளாட்சி மன்றங்களில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு வருவதற்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.12.2025) பேராசிரியர் அவர்களின் 103வது பிறந்தநாளையொட்டி சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று, அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். அமைச்சர்கள் எஸ்.எஸ். சிவசங்கர், பி.கே. சேகர்பாபு, சா.மு.நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், பேராசிரியர் அவர்களின் மகன் அ.அன்புச்செல்வன், பேரனும் சட்டமன்ற உறுப்பினருமான அ. வெற்றி அழகன், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன் மற்றும் பேராசிரியர் அவர்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.


